# யட்டியாந்தொட்ட பிரதேச சபை
## கேகாலை மாவட்டம்

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டியாந்தொட்ட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஊழியர் பிணை வைப்பு ரூபா 58,447 தொகை மீளாய்வாண்டின் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தின் கூட்டுத்தொகைக்குச் சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், அந்த இரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 4,007,591 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நீர் வழங்கல் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 312,791 ஆக இருந்த போதிலும், கணக்குகளில் அது ரூபா 31,291 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 281,500 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) அகற்றப்பட்டிருந்த ரூபா 345,300 கூட்டுத்தொகையான 06 சொத்து விடயங்களை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் ரூபா 112,500 செலவில் நிர்மாணிக்கப்பட்ட இஹல கறாகொட சுடலைக்கூடம் மற்றும் பொதுச்சந்தை கடைகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 31,937 தொகையுமாக ரூபா 144,437 கூட்டுமொத்தமும் மூலமனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 365,525 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடைப் பணம் ரூபா 37,874 தொகை தொடர்பாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,900 மற்றும் மோட்டார் வாகன பழுதுபார்த்தலுக்காகச் செலுத்தவேண்டிய ரூபா 536,422 தொகையான செலவினம் கடன்கொடுத்தோராக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடனின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சுடலைக் கூடத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 1,900,000 பொறுப்புக்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்தச் சொத்துக்கள் ரூபா 112,104,887 கூட்டுத் தொகையாக இருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 114,252,514 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,147,627 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 144,933 தொகையான செலவினம் கடன்கொடுத்தோரில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட வருமானச் செலவினக் கணக்கில் முன்னைய ஆண்டின் கணக்கு மீதிகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருமானச் செலவினக் கணக்கிலும், வருமான விடயங்களிலும் மற்றும் 13 செலவின விடயங்களில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கைகளும், கணக்கிற்கு வழங்கப்பட்ட குறிப்புக்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 14,118,393 வேறுபாடொன்றும் மற்றும் ஐந்தொகைக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குக் குறிப்பில் ரூபா 7,366 வேறுபாடென்றும் அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 123,943,208 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள்/அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 121,663,196 ஆனமையால் ரூபா 2,280,012 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 1,024,562 காலாவதியான 68 வைப்புக்கள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,300,600 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,499,219 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 801,381 அதிகரிப்பைக் காண்பித்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

---------------------------------

### 2.2.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

--------------------------------------------------------------------------

செயலாளரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| i. | ஆதனவரியும் வரியும் | 1,654 | 282 | 3,709 | 2,668 | 1,372 | 1,041 | 1,413 |
| ii. | வாடகை | 113 | 38 | 3,995 | 3,420 | 75 | 575 | 650 |
| iii. | ஏனைய வருமானம் | - | - | 167 | 99 | - | 68 | 68 |

### 2.2.2 வாடகை

-------------------

யட்டியாந்தொட்ட எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைந்துள்ள காணி 2011 ஒக்தோபர் 15 ஆந் திகதி முதல் 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரை உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அறவிட வேண்டிய ரூபா 147,460 தொகை 2104 திசெம்பர் மாத கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபையின் 2015 மே 20 ஆந் திகதி வரையில் பதவியணியினர் தகவல்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட 85 பதவிகளில் 41 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. இது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 48 சதவீதமாகும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது சேவை உடன்படிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்குக்காக அலுவலகக் கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2015 மார்ச் வரை 24 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்காக ரூபா 2,924,013 படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 365,740 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சம்பளமற்ற விடுமுறைக்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 487,437 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 61,300 மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதத்தின் சேவையை விட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 5000 தொகை என்பவற்றை பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதாரப் பிரிவின் தொழிலாளர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 06 வீடுகளில் 2010 மார்ச் 08 ஆந் திகதி முதல் சபையின் 06 தொழிலாளர்கள் குடியிருந்து

வருகின்றனர். இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆவது பந்தியின் பிரகாரம் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 12 ½ சதவீதம் வீதம் கணிப்பிடப்பட்ட வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்தமையினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய வீட்டு வாடகை ரூபா 483,632 ஆகும்.

## 3.3 சிக்கனமற்ற செலவினங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உத்தேச யட்டியந்தொட்ட நகரை அழகுபடுத்தும் திட்டத்திற்காக நில அளவையாளர் திட்டம் தயாரிப்பதற்காக 2014 மார்ச் 20 ஆந் திகதி ரூபா 550,000 தொகை சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2015 மே 21 ஆந் திகதி வரையிலும் எவ்வித அபிவிருத்தித் திட்டமும் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் தயாரிக்கப்பட்ட நிலஅளவை வரைபடம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்காது சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டு முதல் யட்டியந்தொட்ட வீஓய 4 ஆம் கட்டைப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டுச் சென்ற கற்குழியொன்றுக்காக 2011 சனவரி 07 முதல் 2014 சனவரி 06 ஆந் திகதி வரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கும் போது முன்னாள் தலைவரால் 2013 ஆம் ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமையினால் கற்குழியின் உரிமையாளரினால் வழக்கு தொடரப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் சபையினால் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாமைக்கு நியாயமான காரணமின்றின்றியதாகக் காண்பித்து வழக்கு முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் சபையினால் சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 75,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அவிசாவளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 22825 இன் கீழ் சில நபர்களுக்கிடையே காணப்பட்ட காணிப் பிணக்குகள் தொடர்பான வழக்கிற்காக இறுதி பிரதிவாதியாக யட்டியந்தொட்ட பிரதேச சபை பெயரிடப்பட்டிருந்தது. இதற்காக அரசாங்க உத்தியோகத்தராக விளக்கமளிப்பதற்கு சபையின் உத்தியோகத்தரொருவருக்கு முன்வருவதற்கு முடியுமாக இருந்தபோதும் வழக்கிற்காக விளக்கமளிப்பதற்கு சட்டத்தரணியொருவர் முன்வந்தமையினால்

ரூபா 45,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியேற்பப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமான எஸ்ஜீ.ஜீகே - 0627 என்ற கெப் வண்டி ரூபா 936,421 தொகை செலவில் பூரணமான பழுதுபார்த்தலின் பின்னர் 2013 யூலை 30 ஆந் திகதி சபைக்கு எடுத்துவரப்பட்டிருந்தும் 2013 யூலை 30 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 07 ஆந் திகதி வரை வாடகை வாகனமொன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் ஓட்ட விபரங்கள் எதுவுமின்றியும் கூட்டுத்மொத்தமாக ரூபா 1,530,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கலிபவுசர் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்ட டெக்ரர் 2014 மார்ச் 03 ஆந் திகதி முதல் 2015 ஏப்ரல் 11 ஆந் திகதி வரை ரூபா 88,270 செலவில் 809 லீற்றர் டீசல் பயன்படுத்தப்பட்டமையால் அண்ணளவாக ரூபா 6,472 கிலோமீற்றர் அளவில் ஓட வேண்டியிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் 10 சந்தர்ப்பங்களின் போது 112 கிலோமீற்றர் மாத்திரம் ஓடியிருந்தமையினால் பெறப்பட்ட எரிபொருள் அநத வாகனத்திற்காக சபை பயன்படுத்தப்பட்டிருந்ததா என ஏற்றுக் கொள்ளக்கூடிய எந்தத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கூட்டுப்பசளை செயற்திட்டத்தில் பொப்கெட் இயந்திரத்திற்காக 2014 சனவரி 07 ஆந் திகதி முதல் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி வரை ரூபா 283,096 கூட்டுப் பெறுமதியான 2,482 லீற்றர் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறப்பட்ட எரிபொருள் உரிய இயந்திரத்திற்காக பயன்படுத்தப்பட்டமைக்கும் அந்த இயந்திரம் செயற்பட்டமைக்குமான எவ்வித ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் ஏதாவது மாதமொன்றிற்காகச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செலுத்தாமையின் காரணமாக தண்டப் பணமாக ரூபா 41,017 தொகை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

---

1988 இன் நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவையின் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 52 செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 6,128,670 தொகையான நிதிஏற்பாட்டில் 100 சதவீதமும் 17 செலவின விடயங்களில் ரூபா 2,105,322 கூட்டுத்தொகையான நிதிஏற்பாட்டில் 62 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கிடையிலான அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்